உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

**Vol. 6** | **April 1944** | **No. 4**

விஷய சூசிகை. பக்கம்

யோகரத்னாகரம் 119-184

Blood Preasure (பித்திராதிபர்) 1—3

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—

உள்நாட்டுக்கு ரூ. 2

வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8

,, ,, ½-க்கு ரூ 4

,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

**Pandit, S. NARAYANA IYENGAR.**

**Editor and Publisher.**

No. 2, Police Station West Lane, Madura.

காபிரைட்]

[விலை **0—3—0**

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—44.

கடைசிப்பக்கத் தொடர்ச்சி.

பூச்சு என்ற அர்த்தமுள்ளது, அந்த உபலேபம் மிகுந்திருந்தா[illegible] அது ப்ரதிசயம் என்பது பொருள். இதற்கு உரையில் "உபலே[illegible] இவ கோநசித் பிஷ்டேன கண்டே ஹிருதயேச உபலேப: தமனீப்ர[illegible] சய: = தமனீஷு தஸ்யைவ உபலேபஸ்ய," அதிசய: = அதிபூரணமே[illegible] இதன் பொருள்—ஏதாவது ஒருவிதமான மாவால் பூசுவதுபோல் இரு[illegible] பது உபலேபம் ஆகும். இதுவே அதிகமாக இருந்தால் அது ப்ரதிசயம் ஆகும் என்பது பொருள். மாவுபோன்ற ஓர் வஸ்துவால் தொண்டைக்குள் பூசப்பட்டிருந்தால் அது கண்டோபலேபம், ஹிருதயத்தில் பூசப்பட்டிருந்தால் அது ஹிருதயோபலேபம், ரக்தக்குழாய்களில் மிகுந்து பூசப்பட்டிருந்தால் அது தமனீப்ரதிசயம், என இவ்வசனம் கூறுகின்றது. இவற்றுள் பிரகிருதமான தமனீப்பிரதிசயத்தை மாத்திரம் தக்காலம் ஆராய்வோம், ரக்தக்குழாய்களில் மாவுபோன்ற ஓர் பசைவஸ்து தங்கி குழாய்களின் உள் பாகத்தில் அடைபோல காலக்கிரமத்தில் அடர்த்தியாகப் பூசிக்கொண்டால் அது தமனீப்ரதிசயம் என்று ஏற்படுகிறது ஆகவே ஆங்கிலர்கள் சொல்லும் "பிளட்பிரஷர்" என்ற நோய்க்குக் காரணம் ரக்தக்குழாய்களில் அடைபோல சில வஸ்துக்கள் பூசிக்கொள்வதால் குழாய்களின் மிருதுத்தன்மை குறைந்து ரக்த ஓட்டமும் குறுகிய துவாரத்தில் செல்லுவதால் உண்டாவதாகக் கூறுகின்றனர். இதனுடைய மற்ற விவரங்களை கரூர் வைத்ய வாசஸ்பதி, பண்டிட், P. S. ராம சர்மா அவர்கள் சந்திரிகையில் (1940 மே, ஜூன், ஜூலை, மாதங்களில் வெளிவந்துள்ள இதழ்களில்) தொடர்ச்சியாக் எழுதி வெளிவந்துள்ள வியாசங்களில் காணலாம். இனி இதன் சிகித்சை முறைகளைக் கவனிப்போம். வாதகபஹரமான சிகித்சையே இங்கு ஹேது விபர்யஸ்த சிகித்சையாகும். இதில் உபயோகப்படும் மருந்துகள் குழாய்களில் அடைந்துள்ள வஸ்துக்களை அப்புறப்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும். இக்குணமுள்ள மருந்துகளுக்கு "லேகனம்" எனப்பெயர் கூறப்படுகின்றது. நமது யோகரத்னாகரம் தமிழ்மொழி பெயர்ப்பில் 132-வது பக்கத்தில் இதன் விவரம் காணலாம். [illegible] சந்திரிகையில் சிகித்சை முறைகளை விரிவாக விமர்[illegible]போம்.

நெருப்பில் போட்டால் சற்று சொடசொட [illegible] இது சற்று கையில் ஒட்டும். ஈரமில்லாமல் கல்கமானது கையில் தேய்த்தால் மெழுதபோல அல்லது திரிபோல இருக்குமாகில் அது மத்ய பாகம் எனப்பெயர். இந்த கல்கமும் அக்னியில் போட்டால் சற்று ஈரத்தன்மையைக் காட்டும். கல்கமானது கைகளுக்கு மிருதுவாக இல்லாமல் கடினமாகத் தோற்றினல் அது கரபாகமாகும். இதற்கு மீறினல் அது முறிந்தபதமாகும். அதைத் தள்ளவேண்டியதே. பதம் வருவதற்கு முந்தியே இளம் பதத்தில் எடுத்தால் அந்த ஸ்நேஹங்களுக்கு குணம் இராது. தவிர அது அக்னிபலத்தைக் கெடுக்கும். மிருது பாகம் நஸ்யம் முதலியவைகளுக்கு உதவும். மத்யபாகம் எல்லா சிகித்சை முறைகளிலும் உதவும். கரபாகம் என்பது அப்யங்கத்திற்கு உதவும். கிருதம், தைலம், லேகியம். இவை முதலியவைகளை ஒரே நாளில் தயாரித்து விடக்கூடாது, இவைகளைத்தயார்செய்து சிலநாள் வைத்திருந்தபிறகு காய்ச்சினல் மிகுந்த குணம் கொடுக்கும். என்று சார்ங்கதரர் கூறுகின்றனர். காய்ச்சவேண்டிய எண்ணை அல்லது நெய்யை ஓர் போதுமான பாத்திரத்தில் இட்டு சிறுதீ, நடுத்தீ, என்ற முறையில் எரித்து கஷாயம், பால், கல்கம், வாசனைச்சரக்குகள், சுத்தம் செய்யப்பட்ட சரக்குகள் கஸ்தூரி, சந்தனம், விலாமிச்சவேர், கோரைக்கிழங்கு,பூலாங்கிழங்கு செஞ்சந்தனம், கோஷ்டம், சன்னலவங்கப்பட்டை, மஞ்சிஷ்டி, கெவியாசிப்பால், அகில், நகம், கருவாப்பட்டை, குங்குமப்பூ, வால்மிளகு, முதலியவைகளைச்சேர்த்துக் காய்ச்சவேண்டும். லாக்ஷாரஸவிதி— அதாவது ஸ்திரீகள் கால்களின் அலங்காரத்திற்காகச் செய்துகொள்ளும் ஓர் விதக் குழம்புபோன்ற பசைக்கு லாக்ஷாரஸம் அல்லதுசெம்மந்திக்குழம்பு எனச்சாதாரணமாகப் பெயர் சொல்லப்படும். இது தயாரிக்கும் விதம்—லோத்திப்பட்டை பத்துதோலா, சோடா உப்பு தோலா ஒன்று, இலந்தை இலை கொஞ்சம், ஜலம் சின்னப்படி மூன்று இவைகளை அடுப்பில் வைத்துக்காய்ச்சி முக்கால்படியாக வற்றவைத்து வடிகட்டி உபயோகிக்கவும். இனி ஆஸவாரிஷ்டங்கள் தயாரிக்கும் முறை சொல்லப்படுகிறது. மருந்து சரக்குகளைப்பொடி செய்து ஜலத்தில் பலநாட்கள் ஊறவைத்து எடுப்பது ஆஸவாரிஷ்டங்களாகும். மருந்து சரக்குகளைப் [illegible] த்து

அக்னிசம்பந்தமில்லாமல் தயாரித்தால் அது ஆஸவமாகும். (இது பொது விதியாகும்) மருந்து சரக்குகளையும் தண்ணீரையும் அக்னி சம்பந்தத்துடன் தயாரிப்பது அரிஷ்டமாகும். இவைகளின் அளவு நான்குதோலாவாகும். நூல்களில் அரிஷ்ட முறைகளில் அளவு சொல்லப்படாமலிருந்தால் சின்னப்படி 32 படி திரவத்திற்கு வெல்லம் தோலா 400 சேர்க்கவேண்டும். தேன் அளவு சொல்லப்படாமலிருந்தால் வெல்லத்தின் பாதியளவு தேன் சேர்க்கவேண்டும். அரிஷ்டத்தில் சேர்க்கவேண்டிய வஸ்துக்களுக்கு அளவு சொல்லப்படாவிட்டால் வெல்ல அளவில் பத்தில் ஒரு பாகம் சேர்க்கவேண்டும். கரும்புச்சார் போன்ற மதுரமான திரவவஸ்துக்களைப் பச்சையாக வைத்துத் தயாரிக்கப்படுபவை சீதரஸசீது எனப்படும். அந்த திரவங்களையே அக்னி சம்பந்தப்படுத்தித் தயாரித்தால் பக்வரஸசீது எனப்பெயர். அன்னங்களினால் தயாரிக்கப்படுபவை ஸுரை எனப்படும். ஸுரையின்மேல் தெளிவு ப்ரஸந்நா எனப்படும். அதற்கு அடியிலுள்ள கனத்த திரவபாகம் காதம்பரீ எனப்படும். அதற்கு அடியிலுள்ள அம்சத்திற்கு ஜகலம் எனப்பெயர். அதற்கு அடியிலுள்ள பாகம் மேதகம் எனப்படும். இது சாரமற்றதாகும். எதிலிருந்து ஸுரை தயாரிக்கப்படுகிறதோ அந்த மூலத்திரவியத்திற்கு கிண்வம் எனப்பெயர். பனம்பழம், பேரீச்சம்பழம், இவைகளால் தயாரிக்கப்படுவதற்கு வாருணீ எனப்பெயர், கிழங்கு, வேர், பழம் முதலியவை ஸ்நேஹம், உப்புக்கள், ஆகிய இவை சேர்ந்துள்ள திரவம் சுக்தம் எனப்படும். தேன் அல்லது மதுர திரவம் புளித்துப்போனால் அது விநஷ்டம் எனப்படும். விநஷ்டமே மறுபடியும் ஸுரைமுதலியவைகளாகத் திரும்பச் செய்யப்படுமாகில் அதற்கு சுக்ரம் எனப்பெயர். வெல்லத்தண்ணீரில் கல்லெண்ணெ, கிழங்கு, இவைகள், பழங்கள் ஆகிய இவைகளைச்சேர்த்துப்புளிக்கவைக்கப்படுமாகில் அது மதுசுக்தமெனப்படும். இவ்விதமே கரும்பில் சுக்தமும், திராக்ஷா சுக்தமும் செய்துகொள்ளலாம். யவைக்குருணையைப் பச்சையாகச் சேர்த்துத்தயாரிக்கப்படுவதற்குத் துஷாம்பு எனப்பெயர். யவதான்யத்தை உமி நீக்கி வேகவைத்து அதைக்கொண்டு தயாரிக்கப்படுவது ஸௌவீரம் எனப்படும். [illegible]ம், அதாவது சுண்டல், மூலமாகத்

தயாரித்த கஞ்சியால் தயாரிக்கப்படுவது காஞ்ஜிகம் எனப்படும். முள்ளங்கி, கடுகு, முதலியவைகளால் தயாரிக்கப்படுவது ஸண்டாகீ எனப்படும். இனி கல்மதம் தயாரிக்கும் விதம் சொல்லப்படுகிறது. நல்லகல்மதத்தை நொறுக்கிப் பொடியாக்கவேண்டும், பிறகு கொதிக்கும் வென்னீரில் போட்டு மூன்று அல்லது நான்குமணி வைத்திருக்கவேண்டும், பிறகு கையால் பிசைந்து நீரை வடிகட்டி எடுத்துக்கொள்ளவேண்டும். (குறிப்பு—நமது நாட்டில் கல்மதம் கிடைப்பதில்லை. ஆகையால் இதைப்பற்றிய விவரம் பலருக்குப்புலப்படமாட்டாது. அதுபற்றி சற்று விரிவாக எழுதுகின்றோம். ஹிமய மலையின் சில உயரமான பாறைகளில் வெய்யில் காலத்தில் வெய்யில் நன்றாகத் தாக்குவதால் அந்தக்கற்பாறைகள் வெடித்து மெழுகுபோன்ற சத்து வெளிவருகின்றது. சில மரங்களில் பிசின் வருவதை நாம் பார்த்திருக்கிறோம். இது பாறை வெடித்துப் பிசின் வெளிவருகிறது அந்தப்பிசின் கல்மதம் எனப்படும். இந்தப்பிசினை ஆடு முதலிய வைகள் அப்பாறைகளில் ஏறித்தின்றுவிடும். அந்தப்பிசினில் அந்தப்பாறையின் சத்துக்கள் அடங்கியிருக்கின்றன, பாறைகளுக்கு ஏற்றவிதமாகப் பிசினிலும் பேதமுண்டு. சில பிசின் உயர்ந்த குணமுள்ளதாக இருக்கும். சில பிசின் குணக்குறைவாக இருக்கும். இந்தப்பிசின் பிறவியில் மண், கல், முதலியவற்றுடன் கலந்திருக்கும். உதாஹரணமாக கருவேல்பிசின் முதலியவைகளில் மரப்பட்டை முதலியவை கலந்திருப்பதை நாம் பார்க்கிறோம். அது போல இந்தக்கல்மதத்திலும் மண்ணும் கல்லும் கலந்திருக்கும். இவ்விதமே வடதேசத்துக் கடைகளில் கிடைக்கும். இது கோமூத்திர நாற்றத்துடன் இருக்கும். இதிலுள்ள கல் மண்களை விலக்கிக் கல்மதத்தைத் தனிப்படுத்தவேண்டும். அதற்காக இந்தப்பிறவிச்சரக்கைக் கல் உரலில் போட்டு நொறுக்கிக் கொதிக்கும் வெந்நீரில் போட்டு நான்குமணி வைத்திருந்தால் கல்மதம் கரைந்து தண்ணீரில் கலக்கும். அந்த நீரை வடிகட்டினால் கற்கள் முழுவதும் விலகிவிடும். மண்ணில் பெரும்பாகம் விலகிவிடும், மண்ணில் கொஞ்சம் பாகம் அந்த நீரோடு சேர்ந்திருக்கும். இனி சொல்லப்போகும் முறையால் அந்த அல்ப மண்ணும் விலகி சுயமான கல்மதம் கிடைக்கும். பிசினுக்கு எட்டுமடங்கு வென்னீ

ரில் முன்சொன்னபடி ஊரவைக்கவேண்டும். (ஜலம் கொஞ்சம் அதிகப்பட்டாலும் அல்லது குறைந்தாலும் பாதகமில்லை) இவ்விதம் வடிகட்டின நீரை ஓர் வாயகந்த மண்பாத்திரத்தில் கொட்டி அசங்காமல் வெய்யிலில் வைக்கவும். மாடிமுதலான இடங்களில் திறந்த வெளியில் கடுமையான வெய்யிலில் பாத்திரத்தை வைக்கவேண்டும். பாத்திரத்தின் வாய் அகந்து இருக்கவேண்டும். அதாவது குடம் மாதிரியான பாத்திரங்கள் வாய் குறுகலாக இருக்கும், ஆகவே அவை கூடா, பூச்செடிகள் வைக்கும் சட்டிகள் அல்லது மாடுகள் தண்ணீர் குடிக்கக்கூடிய சட்டிகள், ஆகிய இவைபோல வாய் அகலமாக இருக்கவேண்டும். அதில் வடிகட்டின நீரை ஊற்றி அசையாமல் வைத்துப்பகலில் நன்றாக வெய்யிலில் படும்படி செய்ய வேண்டும். இரவில் சட்டியை மூடிவைக்கவேண்டும், இவ்விதம் செய்தால் நீரின்மேல் ஆடை உண்டாகும், இந்த ஆடைதான் சுத்தமான கல்மதம், மறுபடியும் வெய்யிலில் வைக்க ஆடை புடைக்கும், ஆடையை எடுத்துக்கொண்டு வெய்யிலில் வைக்கவும் தேவையானால் மறுபடியும் வெந்நீரை விட்டுக் கொள்ளவும், ஆடை புடைப்பது நின்றுவிட்டால் அதில் கல்மதம் இல்லை யென்று நினைத்து அதைத் தள்ளிவிடவும், பொதுவில் இரண்டு மாதங்களில் அடிநீரிலிருந்து கல்மதம் முழுவதும் வெளிவந்துவிடும். சுத்தமான கல் மதத்தின் பரிக்ஷை—மேற்சொன்னவிதமாகத் தயாரித்த கல் மதத்தில் இரண்டு அல்லது மூன்று குன்றியிடை அனலில் போட அது பொரிந்து லிங்கம்போல உயரும். புகையாது, இதுவே பரிக்ஷை, இதைத்தனித்தும் கூட்டுமருந்துகளுடன் சேர்த்தும் உபயோகிக்கலாம், இனி பஸ்மசிந்தூர முறை சொல்லப்படுகிறது.

பஸ்மசிந்தூரங்கள்—தங்கம், வெள்ளி, பித்தளை, தாமிரம், கருவங்கம், வெள்வங்கம், அயம், ரஸம், என தாதுக்கள் எட்டு எனப்படும், இது சிலருடைய மதமாகும். தங்கம், வெள்ளி, தாமிரம், கருவங்கம்' வெள்வங்கம், பித்தளை, வெங்கலம், அயம், ஆக எட்டு தாதுக்கள் எனச்சிலர் சொல்லுகின்றனர், இவைகளின் பொதுவான சுத்தி—நல்லெண்ணை, மோர், கோமூத்திரம், காடி கொள்கஷாயம், இவைகள் ஒவ்வொன்றிலும் எழு எழுதடவை காய்ச்சித் தோய்க்க

எல்லா உலோகங்களும் சுத்தியாகும் (குறிப்பு—உலோகங்களைப் பஸ்மம் அல்லது சிந்தூரம் செய்வதற்கு முந்தி அவைகளைச்சுத்தி செய்யவேண்டியது அவசியம், கருவங்கம் வெள்வங்கம் நீங்கலாக மற்ற உலோகங்களை முதலில் தகடாகத்தட்டி அவைகளைத்தணலில்போட்டு துருத்திகொண்டு ஊதிப்பழுக்கக்காயவைத்துப் பிறகு முன்சொன்ன திரவங்களில் தோய்க்கவேண்டும். ஓர் இரும்புகரண்டியில் வங்கங்களைப்போட்டு உருக்கி அப்படியே திரவத்தில் சாய்க்கவேண்டும், வங்கங்களைத் திரவத்தில் சாய்க்கும்பொழுது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும், அவை திரவத்துடன் சம்பந்தப்பட்டவுடனே சிறி மேலே அடித்து அபாயம் உண்டாக்கும், ஆகவே திரவங்களைக் கல்உரலில் விட்டு அதின்மேல் எந்திரமூடியை மூடி அந்த எந்திரத்தின் சிறிய துவாரத்தின் வழியாக உருக்கினவங்கங்களைவிட்டால் அபாயம் இருக்காது, நூல்களில் விரிவான சுத்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை யனைத்தையும் செய்வது நலமே. அசாத்தியமாகில் சில சுத்திகளையாவது செய்வது அவசியம், இவ்விதம் சுத்திசெய்த தகடுகளை அரம்கொண்டு தூளாகச்செய்து கொள்ளவும், தங்கம், வெள்ளி, தாமிரம், ஆகிய இவைகளைக் கத்தரிக்கோல்கொண்டு சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும்) இனி உலோக பஸ்மங்களின் நிறம் சொல்லப்படுகின்றது. தங்கம் சம்பகப்பூ நிறமாகவும், வெள்ளி தாமிரம் இவை கருப்பு நிறமாகவும், வெங்கலம் அழுக்கடைந்த வெளுப்பு நிறமாகவும், கருவங்கம் புறாநிறமாகவும், வெள்வங்கம் வெளுப்பு நிறமாகவும், அயம் நாவல்பழ நிறமாகவும், அப்பிரகம் செங்கல்பொடி நிறமாகவும், இருப்பது உத்தமம். (குறிப்பு—வடமொழி வைத்தியத்தில் பஸ்மத்திற்கும் சிந்தூரத்திற்கும் குணத்தில் பேதம் கிடையாது, வெளுப்புநிறமுள்ளவை பஸ்மமெனப்படும், மற்ற நிறங்களைச்சிந்தூரமென்பர். இவைகளுக்குள் வேறுபேதம் கிடையாது. ஆனால் தமிழ் நூல்களில் பேதம் காணப்படுகிறது, கீழே சொன்ன நிறங்கள் பெரும்பான்மையாக சம்பவிக்கக் கூடியவை. வெள்ளியும்தாமிரமும் வெளுப்புநிறமாகத்தயாரிக்கமுடியும், இஷ்டப்படி நிறத்தைக் கொடுப்பதற்குச் சிலமூலிகைகள் நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.) இனி எல்லா உலோகங்களையும் மாரணம் செய்யப்

பொது முறை கூறப்படுகிறது. மனோசிலை, எருக்கம்பால், கந்தகம், இவைகளுடன் சேர்த்து எந்த உலோஹத்தையும் 12 புடமிட பஸ்மமாகும். (குறிப்பு—மனோசிலை, கந்தகம், என்ற சரக்குகள் க்டைகளில் கிடைக்கும், இவற்றுள் எதாவது ஒன்றைச்சமயிடையாக எடுத்து உலோகப் பொடியுடன் சேர்த்து எதாவது திராவம் கொண்டு அரைத்துக்கஜபுடமிடவும்' இவ்விதம் 12 புடமிட பஸ்மமாகும், இவ்விதமே எருக்கம்பாலால் அரைத்துப் புடமிட பஸ்மமாகும், இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய அம்சமென்னவெனில் அரைத்த பிறகு அந்த விழுதை பில்லைதட்டவேண்டும். அந்த பில்லைகள் ஒரு பைசாவளவு இருப்பது சிலாக்யம், காலணா நாணயம்போல இருப்பது மத்யமாகும், அதற்கு அதிக அளவில் பில்லைகள் இருந்தால் அது சிலாக்கியமல்ல, பில்லைகளை வெய்யிலில் நன்றாகக் காயவைத்துப் பிறகு அகலில் இட்டுமேல் அகல்மூடி அகல்வாய்க்குச்சீலைமண் செய்து காயவைத்துப்பிறகு கஜபுடமிடவும். ஒரு கஜம் அகலம் உயரம் ஆழமுள்ள சதுரமான குழிவெட்டி அதில் பாதியளவு எருக்களை அடுக்கி நன்றாக மிதித்துப்பிறது நடுவில் அகலைவைத்துத் தணலிட்டுக் குழியளவுமேல் எருக்களை அடுக்கிவிட இது கஜபுடமாகும். நன்றாக நெருப்பு ஆறின பிறகு எடுக்கவும். உலோகங்கள் இருபது தோலாவுக்குமேல் ஒரு புடத்தில் போடக்கூடாது.) இனி உலோகங்களுக்குத் தனித்தனி மாரணமுறை கூறப்படுகிறது. தங்கம்—பழுக்கக் காய்ச்சினால் சிவந்தும், பிளந்தால் வெளுப்பாகவும், உரைகல்லில் தேய்த்தால் குங்குமம் போன்றும், மிருதுவாகவும், கனமாகவும், வெள்ளி தாமிரம் கலப்பற்றதாகவும் உள்ள தங்கம் உயர்ந்தது. இதுவே மருந்துக்கு ஏற்றது. வெளுப்பாகவும், கடினமாகவும், பசையற்றும், நிறமற்றதும், கலப்புள்ளதும், புரையுள்ளதும், காய்ச்சினாலும் வெட்டினாலும் வெளுப்பாகவும், உரைகல்லில் தேய்த்தால் வெளுப்பாகவும், இலேசானதாகவும் உள்ள தங்கம் மருந்துக்கு ஏற்றதல்ல. இதன் சுத்தி—கொக்குமந்தாரைச்சாற்றில் மூன்று தடவை உருக்கிச்சாய்க்கச்சுத்தமாகும். இனி மாரணம் சொல்லப்படுகின்றது—(1) குகையில் தங்கத்தை உருக்கி அது உருகினவுடன் தங்கத்தின் எடையில் 16-ல் ஒரு பாகம் கருவங்கத்தைக்கொடுத்து உருக்கத் தங்கம்

வெட்டையாகும்.(குறிப்பு—பார்வைக்குத்தட்டையாகவும் கல்வத்தி லிட்டு நொறுக்கினால் பொடியாகக்கூடிய நிலைமையில் உள்ளது வெட்டையெனப்படும்) பிறகு அந்தக்கல்வத்திலிட்டு அரைத்து எலுமிச்சம்பழரஸம்விட்டு அரைத்து அதை உருண்டையாகச் செய்து, சமயிடை கந்தகத்தை கீழும் மேலும் வைத்து அகலில் வைத்து முப்பது காட்டு எருவில் புடமிடவும், இவ்விதம் ஏழுபுட மிட நிருத்தபஸ்மம் ஆகும் (குறிப்பு— உருண்டையை வெய்யிலில் காயவைத்துப்பிறகு உருண்டைக்குச் சமயிடை சுத்த கந்தகப்பொ டியைப் பாதியாக்கி ஓர் பாதியை அகலில் போட்டு பரப்பி அதின் நடுவில் உருண்டையை வைத்து அந்த உருண்டைக்குமேல் மீதி பாதி கந்தகப்பொடியைப்போட்டு மேல் அகல்மூடி வாய்க்குச்சீலை மண்செய்து காயவைத்துப் புடமிடவும்) (2) வேறு முறை— தங்கத்தகட்டிற்குச்சமயிடைகருவங்கச்சிந்தூரத்தை எடுத்து அந்தச் சிந்தூரத்தை எலுமிச்சம்பழ ரசத்தால் விழுதுபோல அரைத்து அந்த விழுதைத் தங்கத்தகட்டிற்கு மேலும் கீழ் தடவி வெய்யி லில் காயவைத்து முன்போல அகலில் வைத்து கஜபுடமிடவும். இவ்விதம் மூன்றுபுடமிட பஸ்மமாகும். (3) வேறு முறை— புறாவின் மலத்தை அரைத்துத் தங்கத்தகட்டிற்குக் கீழ் மேலும் பூசிக்காயவைத்துத் தங்கத்தகட்டிற்குச் சமயிடை கந்தகப்பொடியில் பாதியை ஓர் அகலில் போட்டு அதில் தகட்டை வைத்து அதன் மேல் மீதிபாதி கந்தகப்பொடியைப்போட்டு முன்போல அகல்மூடி ஐந்து எருவில் புடமிடவும். இவ்விதம் ஒன்பது புடமிட்டுப்பிறகு முப்பதுகாட்டு எருக்களால் புடமிட சிந்தூரமாகும். (4) வேறு முறை—இவ்விதமே கோழியின் மலத்தால் செய்யத் தங்கசிந்தூர மாகும், தங்கச்சிந்தூரத்தின் குணங்களாவன —குளிர்ச்சியானது' க்ஷயம், வாந்தி, காஸம், சுவாஸம, பிரமேஹம், ரக்தபித்தம், இளைத் தல், விஷநோய், புண்கள்' பெரும்பாடு, இவைகளைப் போக்கும், மதுரமானது, துவர்ப்பு கசப்புள்ளது, தாதுபுஷ்டிசெய்யும், புத்திக் கூர்மை, அக்னிபலம், சரீரகாந்தி, இவைகளைச் செய்யும். வியா பிக்கும் குணமுள்ளது, திரிதோஷம், பைத்தியம், அபஸ்மாரம், சூலநோய், ஜ்வரம், இவைகளைப் போக்கும், சரீரத்தைப் பெருக்கச் செய்யும், கண்களுக்குநல்லது, தங்கச்சிந்தூர[illegible]

யிடை எடுத்து திரிகடுப்பொடியுடன் சேர்த்து நெய்யில் கொள்ள க்ஷயம், அக்னிமந்தம், சுவாஸகாஸம், அரோசகம், இவைகளைப் போக்கும். ஓஜஸ், தாதுக்கள், இவைகளை விருத்தி செய்யும், பலம் கொடுக்கும், பாண்டு நோய் தீரும், ஸகல விஷங்களும் விலகும், கிரஹணீ நோய் போம், அசுத்தமான தங்கச்சிந்தூரம் பலத்தைப்போக்கும், வீரியத்தைக் குறைக்கும், பலநோய்களை உண்டு பண்ணும், அசௌக்யத்தைக் கொடுக்கும். கடைசியாக மாணத்தை விளைவிக்கும், சுத்தம்செய்த தங்கரேக்கின் குணம்—ஸகலவிஷங்களையும் போக்கும், சூலநோய், அம்லபித்தம், இவைகளைப் போக்கும், ஹிருதயத்திற்கு நல்லது, புஷ்டியைக்கொடுக்கும், க்ஷயம், விரணங்கள், அக்னிமந்தம், விக்கல், வயிற்று உப்புசம், கபநோய், இவைகளைப்போக்கும், ஹிதமானது, தகுந்த அனுபானங்களில் கொள்ள சகலநோய்களும் போம். (குறிப்பு—தங்கத்தை பஸ்மசிந்தூரம் செய்யாமல் தனிரேக்குகளை உபயோகிப்பதுண்டு. சிலர் அன்னத்துடன் சேர்த்துச் சாப்பிடுவதுண்டு, சிலர் வேறுவிதமாக உபயோகிப்பதுண்டு, இவ்விதம் உபயோகிப்பதில் தங்கத்தின் சில அம்சங்கள் சரீரத்தில் சேருகின்றன. சில அம்சங்கள் மலத்துடன் போய்விடும்)

வெள்ளி— சரு குணமுள்ளது, பசையுள்ளது, மிருதுவானது, பழுக்கக்காய்ச்சினபோதிலும் வெளுப்பாகவும், வெட்ட சுலபமானதும், சந்திரன்போல வெளுப்பாகவும், உள்ள வெள்ளி மருந்துக்கு ஏற்றது. பசையற்றதும், அடிப்பதற்கு இணங்காமலும், சிகப்பு மஞ்சள் கலந்த நிறமுள்ளதும், பழுக்கக்காய்ச்சின போதிலும் வெட்டின சமயத்திலும் நிறமற்றதும் ஆக இவ்விதம் பத்து தோஷங்களுள்ள வெள்ளி மருந்துக்கு ஏற்றதல்ல. இனி சுத்திசொல்லப்படுகிறது —வெள்ளியைத்தகடுகளாக்கி நெருப்பில் பழுக்கக்காய்ச்சி அகத்திக்கீரை சாற்றில் மூன்று தடவை தோய்க்கச் சுத்தியாம். இனி மாரணம் சொல்லப்படுகிறது—இவ்விதம் சுத்திசெய்த வெள்ளித்தகடு ஒரு தோலா. பஸம், கந்தகம், வகைக்குத்தோலா ஒன்று, தாளகம் தோலா இரண்டு, இவைகளில் வெள்ளி நீங்கலாக மற்றவைகளைக் கல்வத்திலிட்டு குமரிச்சாற்றால் அரைத்து விழுதுசெய்து அந்த விழுதால் வெள்ளித்தகடு தகடுகளின் மேலும் பூசி காயவைத்து அகலிலிட்டு மேல் அகல்

மூடி வாய்க்குச்சீலைமண் செய்து சாயவைத்து முப்பது காட்டு எரு வில் புடமிடவும், இவ்விதம் இரண்டுதடவை புடமிட வெள்ளிபஸ் மமாகும். (குறிப்பு—காட்டு எரு என்பது மாடுகள் காட்டில் போ டும் சாணி அப்படியே உலர்ந்திருப்பதைக் குறிக்கும். அது கிடைக் காவிட்டால் நமது வீடுகளில் மாடு சாணிபோடுவதை அப்படியே உலர்த்தி எடுத்துக்கொள்ளலாம். அதுவும் கிடைக்காத காலங்களில் விற்பனைக்கு வருவதை எடுத்துக்கொள்ளவும், நன்றாகப் பருமனாக வுள்ள எருவில் முப்பது எடுத்துக்கொள்ளவேண்டும். இம்முறைப் படி தயார்செய்யப்பட்ட வெள்ளிபஸ்மம் கருப்பு நிறமாகவிருக்கும். நல்ல வெளுப்பாகவிராது) (2) வேறுவிதம்—வெள்ளித்தகட்டை யும் ரசத்தையும் சேர்த்து அரைக்க மெழுகாகும். அதாவது எலு மிச்சம்பழ ரசத்தைவிட்டரைக்க மெழுகாகும், பிறகு தாளகம் கந்தகம் இவைகளைச்சேர்த்து எலுமிச்சம்பழ ரஸம்விட்டு அரைத்து முன்போல மூன்றுபுடமிட பஸ்மமாகும், முன்சொன்ன அளவுப்படி ரஸகந்தகதாளகங்களை இங்கும் எடுத்துக்கொள்ளவேண்டும், பில்லை தட்டிக்காயவைத்துப் புடமிடவேண்டும். இவ்விடத்தில் வெள்ளி ரேக்குகளை எடுத்துக்கொள்ளவெண்டும், தகடு பருமனாக இருந்தால் அது ரசத்துடன் சேர்ந்து மெழுகு ஆக மாட்டாது, சற்று பரும னாத் தகடுகளாக இருந்தால் அவற்றை சிறியதுண்டுகளாகக் கத்த ரித்துக்கொண்டு மற்ற வஸ்துக்களுடன் சேர்த்து அரைத்துக்கொ ள்ளவும், மெழுகாக ஆகாவிட்டாலும் புடமிட பஸ்மமாகும். (3) வேறுவிதம்—சுவர்ணமாக்ஷிகம், இலிங்கம், வெள்ளித்தகடு, இவை களைச்சமயிடையாக எடுத்து எலுமிச்சம்பழ ரஸம்விட்டு அரைத்து பில்லைதட்டிக் காயவைத்து மூன்று புடமிட பஸ்மமாகும், இந்த பஸ்மமும் சற்று கருப்புநிறமாகவே யிருக்கும், வெள்ளிபஸ்மகுணங் கள்—குளிர்ச்சியானது, துவர்ப்பு, புளிப்பு, மதுரமுள்ளது, கிரி தோஷஹரம், பசையுள்ளது, தீபனம், கண்நோய், வயிற்றுநோய், எரிச்சல், விஷநோய், அதிக மேதஸ்ஸால் உண்டாகும் நோய், மதாத் யயம், ஆகிய இவைகளைப்போக்கும், ஆயுள், ஆரோக்யம், இவை களைச்செய்யும், க்ஷயம், அபஸ்மாரம், சூலம், பாண்டு, நரை, ப்லீஹ நோய், சுரம், இவைகளைப்போக்கும், வியாதிகுணமுள்ளது, வெள்ளி யைச்சுத்தம் செய்யாமல் பஸ்மம் செய்தால் அது பாண்டு, அரிப்பு,

தொண்டையடைப்பு, ரக்தஓட்டத்தில் தடை, வீர்யநாசம், பலஹாநி, தலைவலி, ஆகிய இவைகளைச் செய்யும். தாமிரம்—பாஷாணம் முதலியவை விஷமல்ல, தாமிரமே விஷமாகும், ஏனெனில் விஷத்தில் ஒரே தோஷம் உண்டு, தாமிரத்திலோவெனில் எட்டு தோஷங்கள் இருக்கின்றன. அவை யாவன—கிறுகிறுப்பு, மூர்ச்சை, எரிச்சல், வியர்வை, தாதுக்கள் அழுகிப்போதல், வாந்தி, அரோசகம், மனோவேதனை, ஆகிய இவை விஷம்போன்றுள்ளவை. ஆகவே இத்தோஷங்கள் விலகத் தாமிரத்தைக் களும்பறச் சுத்திசெய்யவேண்டும். தாமிர சுத்தி—சதுரக்கள்ளிப்பாலில் இந்துப்பைச்சேர்த்து அரைத்து விழுதாக்கி அவ்விழுதால் தாமிரத்தகட்டைப் பூசி பிறகு நெருப்பில் பழுக்கக் காய்ச்சி கருநொச்சி ரசத்தில் தோய்க்கவும். இவ்விதம் மூன்று தடவை செய்ய சுத்தியாகும். மறு முறைச் சுத்தி:— தாமிரத்தகட்டைப் பழுக்கக் காய்ச்சிச் சதுரக்கள்ளிப்பால் அல்லது எருக்கம்பாலில் மூன்றுதடவை தோய்க்கச் சுத்தியாம், இவை உயர்ந்த சுத்தியாகும். அல்லது கோமூத்திரத்தில் இந்துப்பு எலுமிச்சரஸம் இவைகளைச் சேர்த்து அடுப்பேற்றி அதில் தாமிரத்தகட்டைப் போட்டு ஒரு யாமம் அதாவது நான்குமணி எரித்துத் தகட்டைக்கழுவி எடுத்துக்கொள்ளச் சுத்தியாகும், இனி மாரணம் சொல்லப்படுகிறது—சுத்திசெய்த தாமிரத் தகட்டிற்குச் சமயிடை ரஸம்சேர்த்து, எலுமிச்சம்பழ ரசம் விட்டு அரைக்க விழுதாகும், அதாவது வர்ணத்தகடுபோல மெல்லியதாக இருக்கும் தகட்டைகத்தரித்துத் துண்டுகளாக்கி அதைக்கல்வத்திலிட்டுச் சமயிடை ரஸம் சேர்த்து எலுமிச்சம்பழரஸம்விட்டு அரைக்கச்சந்தனவிழுது போலாகும், பிறகு தாமிரம் ரஸம் இவைகளுக்குச் சமயிடை கந்தகத்தையும் சேர்த்து அதே ரஸம்விட்டு அரைத்து பில்லைதட்டிக் காயவைத்து அகலில்வைத்து அகல் மூடி கஜபுடமிட பஸ்மமாகும். இது கருப்பு நிறமாக இருக்கும். வேறுமுறை—திலபர்ணீ என்ற வெள்ளுள்ளியின் ரஸத்தால் தாமிரத்தகடுகளைப்பூசி கஜபுடமிட வெளுப்பு நிறமான பஸ்மமாகும். (குறிப்பு—திலபர்ணீ என்பது வடமொழிச் சொல், இதற்குப்பொருள் நன்றாக நிச்சயமாக விளங்கவில்லை, தாமிர பஸ்மம் செய்வதில் இம்மூலிகை அவசியமெனப் பலரால் ஆராயப் பட்டுவருகிறது. தீர்மானமாக இதுவரை இதுகண்டுபிடிக்கப்பட

வில்லை. நமது ஆராய்ச்சியில் இது தைவேளை எனப்புலப்படுகிறது. ஆனால் இது தீர்மானமல்ல, இன்னும் இதுபற்றி ஆராய்ச்சி செய்து வருகிறோம், முடிவுதெரியும்பொழுது சஞ்சிகையில் வெளிவரும் பொதுவில் தாமிரபஸ்மம் வேறு முறைகளால் தயாரிக்கப்படும் பொழுது அதன் நிறம் சுத்த வெளுப்பாக இருப்பதில்லை. ஆகவே வெண்மை நிறத்திற்காகப்பலர் பிரயத்தனம் செய்வது வழக்கம். இம்மூலிகை வெண்மை நிறமான பஸ்மம் தயாரிக்க உதவுமெனநூல்கள் கூறுகின்றன. ஆனால் நூல்கள் கூறுவதுபோல இம்மூலிகை ஒரு புடத்திலோ அல்லது பல புடங்களிலோ தாமிரத்தைப் பஸ்மம் செய்ய உதவுமென்று தோன்றவில்லை. வேறு முறைகளால் பஸ்மம் செய்தபிறகு வெண்மை நிறத்திற்காக இம்மூலிகை யுதவுமென்று தோன்றுகிறது.)

த்ரபுதாமிரம்—சுத்தம்செய்த தாமிரத்தகட்டை இரண்டு தோலா எடுத்து ஒரு தோலா யிடையுள்ள த்ரபு என்ற உலோகத்தின் தகட்டால் மூடி ஓர் சட்டியில் வைத்து மேல்சட்டிமூடி வாய்க்குச்சீலைமண்செய்து அடுப்பேற்றி நான்குமணிநேரம் எரித்து ஆறவிட்டு எடுக்க வெட்டையாகும், பொடிசெய்து அளவுப்படி உள்ளுக்குத்தகுந்த அனுபானத்தில் கொடுக்கவும். குறிப்பு—த்ரபு என்ற வடமொழிச் சொல்லுக்குப் பொருள் விளங்கவில்லை. ஆகவே இம்முறையை நாம் அனுபவத்தில் பார்க்கவில்லை. த்ரபு என்பது இங்கு கருவங்கத்தைக் குறிக்குமென்று தோன்றுகிறது. ஏனெனில் தாமிரத்தை வெட்டையாக்குவதில் வெள்வங்கம் அல்லது கருவங்கம் இவைகளுக்குத்தான் யோக்யதையுண்டு. அவ்விதம் செய்துபார்த்த அனுபவம் உண்டு. த்ரபு என்பது உலோகத்தைக் குறிக்கின்றதேயன்றி வேறு மூலிகை வகைகளைக் குறிக்காது. ஆகவே தாமிர சூர்ணத்தை இரண்டுதோலா எடுத்து ஒரு தோலா யிடையுள்ள கருவங்கம் அல்லது வெள்வங்கத்தை மெல்லிய தகடாகத்தட்டி அதில் மேடி சூர்ணத்தைச்சுற்றி அப்படியே ஓர் மண் சட்டியில் வைத்து முன் சொன்னபடி செய்து எரிக்கவும். பொதுவாகத் தாமிரபஸ்மத்தை இரண்டு குன்றியிடை அளவில் கொடுக்கலாம். தனித்தும் கொடுக்கலாம், அல்லது மற்ற பஸ்மங்களுடன் சேர்த்தும் கொடுக்கலாம், தனித்துக்கொடுப்பதில் குஷ்டரோகங்கள்

நிவர்த்தியாகுமென்று பலருடைய எண்ணம், நமது நாட்டில் சாதாரண ஜனங்கள் பலர் தாமிரபஸ்மம் சிலவேளைகளில் குஷ்டரோகத்தை விலக்கிவிடுமென்று நம்புகின்றனர், பலகதைகளும் சொல்லப்படுகின்றன, உண்மையில் அவ்வித பெருமை தாமிரபஸ்மத்திற்கு உண்டென்பதை நூல்களாலும் அறியமுடியவில்லை, அனுபவத்தில் கொஞ்சமும் புலப்படவில்லை, தனித்தாமிர பஸ்மத்திற்கு உள்ள விசேஷ யோக்யதையை நம் அனுபவத்தில்கண்டபடி கூறுங்கால் அது பரிணாமசூலம் என்ற gastric ulcer நோயில் மிகுந்த குணம் கொடுக்கின்றது என்று உறுதியாகச் சொல்லலாம், ஷடி நோய் கண்டு பலவருஷங்களாகமிகவும் கஷ்டப்பட்டு மெலிந்த நோயாளிகளுக்குக்கூட தாமிரபஸ்மம் விரைவில் சிலவேளைகளிலேயே பூர்ண குணத்தைக்கொடுக்கின்றது, திரும்பி அந்த நோய் வந்ததில்லை, சங்கவடீ போன்ற நூல்களில் சொல்லப்பட்ட மருந்துகள் ஒன்றிலும் குணப்படாத பரிணாமசூலம் தாமிரபஸ்மத்தால் விரைவில் குணமாகின்றது. இது நாம் பலதடவைகளில் அனுபவித்த விஷயம், இதற்கு நூல்களின் ஆதாரமும் இருக்கின்றது, பரிணாமசூலநோயில் தாமிரபஸ்மம் சேர்ந்த பலமுறைகள் நமது நூல்களில் காணப்படுகின்றன, தனியாகக் குஷ்டநோயில் கொடுத்ததில் சாமான்ய குணத்தைத்தவிர நல்ல குணம் ஏற்பட்டதில்லை, குஷ்டநோயில் தாளக பஸ்மம் நல்ல குணம் கொடுக்கின்றது) ஷடி தாமிரபஸ்மத்தை சுக்கு, மிளகு, யவக்ஷாரம், இஞ்சிரஸம், இந்த அனுபானங்களில் சாப்பிட கபநோய், அரோசகம், பிலீஹா, ஆகிய இவை விலகும், இனி சோமநாத தாமிரம்—தாமிரம், ரஸம், கந்தகம், இவை சமயிடை, தாளகம் பாதியிடை, மனோசிலை தாளகத்தில் அளவில்பாதி எடுத்து, தாமிரம் நீங்கலாக மற்றவைகளை அரைத்து விழுதாக்கி ஷடி விழுதால் தாமிரத்தகடுகளைப்பூசி இவைகளை ஓர் அகலில் வைத்துக் காயவைத்து மேல் அகல்மூடி வாய்க்குச்சீலைமண் செய்து வெய்யிலில் காயவைத்து அதை வாலுகாயந்திரத்தில் வைத்து அடுப்பேற்றி எட்டுமணி எரித்து ஆறவிட்டு எடுத்துப்பொடிசெய்து இரண்டு குன்றியிடை தகுந்த அனுபானத்தில் சாப்பிட பரிணாமசூலம், மகோதரம், சூலம், பாண்டு, ஜ்வரம், குன்மம், ப்லீஹா, க்ஷயம், அக்னிமந்தம், சுவாஸம், காஸம், கிரஹணீ, ஆகிய இவை

யாம், "யோகரத்ன ஸமுச்சயம்" என்ற நூலிலும் இவ்விதமே ஸோமநாத தாமிரம் சொல்லப்பட்டிருக்கிறது. (குறிப்பு—இது தயாரிக்கும் விதம் விவரமாக எழுதுகிறோம். தாமிரத்தகட்டைச் சுத்தி செய்து நான்கு தோலா எடுத்துக்கொள்ளவும். ஷெடி தகட்டைச் சிறுதுண்டுகளாகக் கத்தரிக்கோல் கொண்டு கத்தரிக்கவேண்டும், பிறகு ஓர் கல்வத்தில் ரஸம் நான்குதோலா, கந்தகம் எட்டுதோலா, இவைகளைப்போட்டு திரவம் விடாமல் நன்றாக அரைத்து ரஸம் நன்றாக மடியும்படி செய்யவும், ரஸம் மடிவதென்றால் அதன் உருவம் கண்ணுக்குப் புலப்படாமல் கந்தகத்துடன் ஒன்றுசேர்ந்துவிடுவதென்று பொருள், இவ்விதம் ஒன்றுசேருவதை மடிந்துபோதல் என வைத்திய பரிபாஷையில் சொல்லப்படும். பிறகு அதில் தாளகம் தோலாஇரண்டு,மனோசிலை தோலாஒன்று,இவைகளையும் சேர்த்து நன்றாகப்பொடிசெய்து எலுமிச்சம்பழ ரஸத்தைவிட்டு நன்றாக விழுதுபோல் அரைக்கவும், பிறகு தாமிரத்தகட்டையும் சேர்த்து அரைத்து ஓர் உருண்டையாகச்செய்து அல்லது கட்டையாகத் தட்டி வெய்யிலில் காயவைக்கவும், பிறகு அதை ஓர் தகுந்த அளவுள்ள மண் அகலில் வைத்து மேல் அகல் கவிழ்த்து மூடி சந்துவாய்சுருச்சீலைமண் செய்து காயவைத்தபிறகு ஓர் மண்சட்டியில் நான்குவிரல் அளவு மணல்கொட்டி பரப்பி அதன் நடுவில் ஷெடி அகலை வைத்துச் சட்டியின் கழுத்துவரையில் மணல்கொட்டி மேல் சட்டிமூடி காடாக்னியாக எரித்து மறுநாள் எடுத்து அகலில் உள்ள பஸ்மத்தை எடுத்துப்பொடிசெய்து கொள்ளவும், நிறம் நல்ல கருப்பாக விருக்கும், வடதேசங்களில் இம்முறை மிகவும் கையாளப்படுகிறது, வாந்தி, விரேசனம், செய்யாது, அதாவது தாமிர பஸ்மத்தில் கலும்பு இருந்தால் அது உட்கொண்டவுடன் வாந்தியையும் விரேசனத்தையும் செய்யும், அவ்வித பஸ்மங்களை உபயோகிக்க லாகாது, வாந்தி விரேசனங்கள் செய்யாத பஸ்மத்தைத்தான் உட்கொள்ளவேண்டும்.) தாமிரத்தின் குணங்களாவன—குளிர்ச்சியானது, புண், கிருமி, மகோதரம், வயிற்று உப்புசம், பிலீஹா, பாண்டு, சுவாஸம், கபரோய், ரக்தவாதம், க்ஷயம், வாதரோய், இருவித சூலங்கள், குன்மம், பதினெட்டு குஷ்டங்கள், இவைகளைப்போக்கும், தாதுபுஷ்டி, ருசி, இவைகளைக் கொடுக்கும், ரக்தரோய்,மேதஸ்

அம்லபித்தம், ஆகிய இவைகளை நீக்கும், அசுத்த தாமிரம்—கிருமி
கள், மகோதரம், வயிற்றுப் பொருமல், குஷ்டம் இவைகளை உண்டு
பண்ணும். பித்தளை, வெங்கலம்—பித்தளை இருவிதமாகும், அவற்
றுள் ராஜரீதிகா என்ற வகை உத்தமமானது, காகதுண்டீ என்ற
வகை இளப்பமானது, இதன் சுத்தி—ராஜரீதிகா என்பதை நெருப்
பில் காய்ச்சி காடியில் தோய்க்கச் சிவந்து சுத்தியாகும். இவ்விதம்
செய்ய காகதுண்டீ கருப்பாகும். ஆகவே கருப்பு நிறமாவதை உப
யோகிக்கலாகாது. வெங்கலம் இருவகையாகும். அவற்றுள் புஷ்பம்
என்ற வகை மிகுந்த வெளுப்பாகவும், தைலிகம் என்ற வகை சற்று
கருப்புகலந்த வெளுப்பாகவும், இருக்கும். அவற்றுள் புஷ்பம் என்ற
வகை பஸ்மம் செய்ய உத்தமமானது, வெங்கலத்தை தாமிரம்
போல சுத்திசெய்யவேண்டும், தாமிர முறைப்படியே பித்தளையை
யும் வெங்கலத்தையும பஸ்மம் செய்யவேண்டும், பித்தளைகளின்
குணம்—பசையற்றது, கசப்பும், உப்பும் உள்ளது, வியாபி, சோத
னம் செய்யும். அதாவது வாந்தியையும் மலப்பிரவிருத்தியையும்
செய்யும், பாண்டு, கிருமி. இவைகளைப் போக்கும், குளிர்ச்சியானது,
லேகனம். (குறிப்பு—லேகனம் என்பது வடமொழிச்சொல், இதன்
பொருளைக் கவனிக்கவேண்டும், அதாவது சுரண்டுவது என்பது
அதன் பொருள், ரக்தக்குழாய் அல்லது ஸ்ரோதஸ்ஸுக்களில் ஏற்
படும் அடைப்புக்கு விபந்தம் அல்லது சொருகல், அடைப்பு
என்று பெயர், அதைப்போக்கடிக்கும் குணமுள்ள வஸ்துக்கள்
'விபந்தஹரம்" ஆகும், அவ்விதமே ரக்தக்குழாய்கள் அல்லது
ஸ்ரோதஸ்ஸுக்களில் ஓர்வித வஸ்து பூசிக்கொண்டால் அதற்கு
உபலேபம் என்று பெயர், உதாஹரணமாகக் காய்ச்சல் முதலியநோய்
களில் நாக்கில் மாசுபடிந்துகொள்வதைப் பார்க்கிறோம். அது
"ஜிஹ்வா உபலேபம்" அல்லது நாக்கில மாசுபடிதல் எனக் கூறப்
படுகிறது, இவ்விதமே ரக்தக்குழாய்களின் உள்பாகத்தில் கபம் முத
லியவைகள் பூசிக்கொண்டால் அதற்கு "ஸிராஉபலேபம்" எனப்
பெயர் ரக்தத்தில் இருக்கும் வஸ்துக்கள் ரக்த ஓட்டத்திலுள்ள
குற்றத்தால் ரக்தக்குழாய்களின் உள்பாகத்தில் கொஞ்சம் கொஞ்ச
மாகப்பூசிக்கொண்டு (கற்களின்மேல் பாசிபடருவதுபோல) கனத்
துக்காலக்கிரமத்தில் த்வாரத்தைச் சிறியதாகச் செய்வதால் ரக்த

ஓட்டத்தில் தடை ஏற்பட்டுப் பலவியாதிகள் உண்டாகக் காரண மாகின்றது, இது ஸிரா உபலேபம் அல்லது தமனீ உபலேபம் எனப்படும், இந்தப்பூசும் வஸ்துக்களைக் கரைத்துவிடும் குணமுள்ள வஸ்துக்களுக்கு "லேகனம்" எனப்பெயர்) வெங்கலத்தின் குணம்— துவர்ப்பு கசப்பு குணமுள்ளது, உஷ்ணமானது, லேகனம், அழுக் கைப்போக்கும், வியாபி, பசையற்றது, குரு, கண்களுக்கு நல்லது, கடபித்தஹரம், இனி அயம் சொல்லப்படுகிறது—இரும்பு, உருக்கு' காந்தம், என அயம் மூவகைப்படும், இவற்றுள் சாதாரண இரும் பைவிட உருக்கு நூறுமடங்கு உயர்ந்தது, உருக்கைவிட காந்தம் நூறுமடங்கு உயர்ந்தது, இவற்றுள் சாதாரண இரும்பு உருண்டை யாகப்பூமியில் அடியிலும் பர்வதங்களிலும் காணப்படுகிறது, கஜ பவி முதலியன உருக்கு இனத்தைச் சேர்ந்ததாகும், காந்தக்கல்லில் உண்டாவது காந்த இரும்பாகும், இவற்றுள் உருக்கு என்பது வட மொழியில் "தீக்ஷணம்" என அழைக்கப்படும், இதன் பரீக்ஷை யாவது—கண்ணாடியில் முகம் தெரிவதுபோல உடம்பின் அவயவம் தெரிந்தால் அது தீக்ஷணமெனப்படும். தீக்ஷணத்தைத் தகடுதட்டி அதில் அன்னபேதி, நெல்விவற்றல் இவைகளின் பொடியைத்தட வித்துவைத்துவிட்டுப் பார்த்தால் முகம் தெரியும், கண்ணாடியில் போலமுகம் தெரியும், காந்தக்கல் இரும்பின் பரீக்ஷை—அந்த இரும்பால் ஓர் பாத்திரம் செய்து அதில் ஜலத்தைவிட்டு அந்த ஜலத்தில் ஓர் சொட்டு நல்லெண்ணெ விட்டால் அந்த நல்லெண்ணெ தண்ணீரில் பரவாமல் அப்படியே மிதக்கவேண்டும், அந்தப்பாத்தி ரத்தில்பெருங் காயம் வைத்தால் பெருங்காயத்தின் மணம் போய் விடும், வேப்பம் இலையை அரைத்து உருட்டிவைத்தால் கசப்பு போம் அப்பாத்திரத்தில் பால்வைத்து அடுப்பேற்றிக் காய்சினால் பால் பொங்கி பாத்திரத்தின்மேல் சிகரம்போல நிற்குமேயன்றி எவ்வளவு காய்ச்சினபோதிலும் பொங்கி கீழே வழியாது அப்பாத் திரத்தில் தண்ணீர் கொட்டி கடலை அதாவது கொத்துக்கடலை யைப்போட்டால் தண்ணீரில் இருக்கும் அக்கடலை நெருப்பில் போடப்பட்ட கடலைபோல வெந்து கருகிவிடும், ஆக இந்த ஐந்துவித மான பரீக்ஷைகளால் காந்த இரும்பைக்கண்டு கொள்ளவேண்டும். (குறிப்பு—உலோகங்களுக்குள் இரும்பே முக்கியமானது, அயச்சிந்

தூரம் சேராத முறைகளே நூல்களில் கிடையாதெனக் கூறலாம், பல நோய்களில் அயச்சிந்தூரம் மிகுந்த நன்மை யளிக்கின்றது, தனித்தும் கூட்டுமருந்துகளிலும் சேர்ந்து உபயோகமாகின்றது, இதைப்பற்றி நன்கு தெரிந்துகொள்வது அவசியமாகும், நமது நாட்டில் முக்கியமான மருக்கு இரும்பு, தேன் இரும்பு, என இரண்டு வகை தென்படுகிறது, இவற்றுள் தேன் இரும்பு என்பதை நூல்கள் சாதாரண இரும்பு என்கின்றன, இதைக்காய்ச்சித்தட்டினால் வளைந்துகொடுக்கும் சுபாவமுண்டு, இதையே தற்காலம் பெரும்பாலும் சிந்தூரத்திற்கு உபயோகிக்கின்றனர், கல்தச்சர்கள் வைத்துக்கொண்டிருக்கும் உளி உருக்கு இரும்பால் தயாரிக்கப்பட்டது, ஆகவே அந்த உளிகளை வாங்கி அரம்கொண்டு பொடிசெய்து சிந்தூரம் செய்துகொள்ளவேண்டும், இந்த முறையையும் சில வைத்தியர் தற்காலம் கையாண்டுவருகின்றனர், முன்சொன்ன தேன் இரும்பு சிந்தூரத்தைவிட இந்த உருக்குசிந்தூரம் அதிக குணமுள்ளதாகக்காணப்படுகிறது, காந்த இரும்பு என்பது காந்தக்கல்லிலிருந்து இரும்பைத்தனிப்படுத்தி எடுத்துக்கொள்ளவேண்டும், இம்முறை தற்காலத்தில் அனேகமாக யாருக்கும் தெரியாது, கடின சாத்தியமாதலால் இம்முறையை விரும்புபவர்களே கிடையாது, காந்தத்தைச் சில சாமான்கள் சேர்த்து குகையில் வைத்து துருத்திகொண்டூதினால் காந்தம் உருகி அதிலிருந்து "ஸத்வம்" என்ற சத்து வெளிப்படும், இம்முறையை அனுஷ்டிப்பவர் உண்டு, இவ்விதம் வந்த ஸத்வத்தைப்புடம்போட்டுச் சிந்தூரம் செய்யவேண்டும், இவ்விதம் அயத்திலிருக்கும் ஸத்வம் எடுக்கலாம், அப்பிரகம் முதலியவைகளிலிருந்தும் எடுக்கலாம், இம்முறையை "ஸத்வபாதனம்" என்று வடமொழி நூல்கள் கூறுகின்றன, தாளகம், கந்தகம், போன்றவைகளில் ஸத்வம் எடுப்பதில்லை, ஆனால் தற்காலம் சிந்தூரத்திற்காகக்கடையில் விற்கும் காந்தத்தையேதான் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது, இந்தக்காந்தத்தில் நூல்களில் கூறப்படும் குணங்கள் காணப்படமாட்டாது, நம் அனுபவத்தில் கடையில் இருக்கும் காந்தத்தால் தயாரிக்கப்படும் சிந்தூரத்தைவிட உருக்கு சிந்தூரமே உயர்ந்ததாக காணப்படுகிறது. கடையில் கிடைக்கும் காந்தம் இருவகையாகும், அவற்றுள் கல்காந்தம் என்பது பிரயோசனமற்றது.

## Blood Preasure (பத்...)

"ப்ளட்ப்ரஷர்" என்று நவீனர்கள் சொல்லு... வியாதியின் விவரங்களைப்பற்றி அறிய விரும்பிப் பல நண்பர்கள் நமக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். இதைப்பற்றிச் சுதேசவைத்யநூல்கள் என்ன கூறுகின்றன என்பதை அறியவே பலர் விரும்புகின்றனர், ஏனெனில் இதைப்பற்றிய விவரங்கள் ஆங்கிலநூல்களில விஸ்தாரமாகக்காணப்படுவதால் வியாதியைப்பற்றிய விவரங்களைப் பெரும்பாலும் சுதேசவைத்தியர்களும் அறிந்திருக்கக்கூடும், ஆங்கில நூல்களும் இந்நோயைப்பற்றிய காரணங்களைக் கூறிவிட்டு அதன் சிகித்சையைச்சொலலும்பொழுது வழக்கம்போல கையை விரித்துவிடுகின்றன, தன் நோயைப் பெயருடன் தெரிந்துகொள்ளுவது மாத்திரமே நோயாளிக்குப் புருஷார்த்தமாகாது. நோயின் காரணமும் பெயரும் தெரியாவிட்டாலும் கூட நோயாளி முழுமனதுடன் கோருவது பரிஹாரமே, ஆகையால் பரிஹாரம் சொல்லாமல் நோய்க்கு ஓர் பெயரை இட்டுவிடுவது மாத்திரம் வைத்தியனுக்குக் கௌரவத்தை அளித்துவிடாது. இந்த தாத்பரியம் கொண்டே வாக்படரும் "விகாரநாமாகுசலோ ந ஜிஹ்ரீயாத் கதாசன। நஹி ஸர்வ விகாராணாம் நாமதோஸ்தி த்ருவா ஸ்திதி:' ॥ என்றார். நோயாளிக்கும் வைத்தியனுக்கும் பெருமையளிப்பது வியாதியின் பரிஹாரமே. ஆகவே இந்நோயைப்பற்றி நமது முன்னோர்களின் அபிப்பிராயத்தை நாம் அறியவேண்டியது அவசியமே. அடியில் எழுதப்படும் விஷயங்களால் இந்த நோயின் விவரங்களைப்பற்றி நமது முன்னோர்கள் பூர்ணமாகவே பரிசயம் பெற்றிருந்தனர் என்பது நன்கு விளங்குகிறது. "அசீதிர் வாதஜாரோகா:, சத்வாரிம்சத் பித்தஜா:, விம்சதி: ச்லேஷ்மஜா:" என்று நூல்கள் கூறுகின்றன, வாயுவால் உண்டாகும் பிரதான நோய்கள் எண்பது, பித்தத்தால் உண்டாகும் நோய்கள் நாற்பது, கபத்தால் உண்டாகும் நோய்கள் இருபது என்பது இவ்வசனத்தின் பொருள், இந்நோய்களின் பெயர்களும் நூல்களில் காணப்படுகின்றன. அஷ்டாங்க ஸங்கிரஹம் ஸூத்ரஸ்தானம் இருபதாவது அத்யாயத்தில் இதன் விவரங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் கப நோய்களில் "தமனீப்ரதிசயம்" என்ற ஓர் நோய் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வியாதியின் பெயரைக்கொண்டே வியாதியின் லக்ஷணங்களை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். ஏனெனில்கீழேசொன்ன

...த்தம் 140 வியாதிகளில் சில மகாரோகங்களென்றும் சில க்ஷுத்ர ரோகங்களென்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மகாரோகங்களுக்கும் க்ஷுத்ரரோகங்களுக்கும் பேதம் சொல்லும்பொழுது ஷை அத்யாயத்தில் "மஹாவிகாராஸ்து யதாஸ்வமேவ உபசி யந்தே, க்ஷுத்ரவிகாரா: புந: யதங்கமேவ ஆவிசந்தி தநுபபதே நாமலபந்தே, யதா, நகசங்க லலாட பேதா: ஸாந்தர்தாஹகண் ஹிருதயோபலேபா:, தேஷாம் ஹி தனைவ ஸ்வரூபமு பதிஷ்டட பவதி" இதன் பொருள்—ஜ்வரம் முதலிய மஹாரோகங்களைப்பற்றி விரிவாகத்தனி அத்யாயங்களில் சொல்லுவோம், க்ஷுத்ரரோகங்கள் சரீரத்தில் எந்த அவயவம் அல்லது பாகத்தைப் பீடிக்கின்றனவோ அந்த அவயவங்களை யொட்டிப் பெயர்பெறுகின்றன. உதாஹரணமாக நகத்தில் வலிகாணுமாகில் அந்நோய்க்கு "நகபேதம்" என்றும், சங்கத்தில் (நெற்றியில் இருக்கும் பொரி) வலி காணுமாகில் "சங்கபேதம்" எனவும், லலாடத்தில் (நெற்றி) காணும் வலிக்கு" லலாடபேதம்" எனவும், உள்ளே (சரீரத்துள்ளே) காணும் எரிச்சலுக்கு "அந்தர்தாஹம்" எனவும், கண்டத்தில் (தொண்டையில்) காணும் உபலேபத்திற்கு கண்டோபலேபம், ஹிருதயத்தில் காணும் உபலேபத்திற்கு "ஹிருதயோபலேபம்" எனவும், இதுபோலவே அந்தந்த அவயவங்களில் காணும் சில்லரை நோய்களுக்கு அந்தந்த அவயவங்களை முன்னிட்டே வியாதிகளின் பெயரைக்கொள்ள வேண்டும், இவ்விதம் சொல்லப்படும் பெயர்களைக்கொண்டே வியாதிகளின் லக்ஷணமும் சொல்லப்பட்டதாக ஆகின்றது." என்பது பொருள், ஆகவே "தமனீபிரதிசயம்" என்ற பதத்தால் இவ்வியாதியின் லக்ஷணமும் நமக்குப் புலப்படுகின்றது, தமனீ என்ற சொல் ரக்தக்குழாய்களைக் குறிக்கின்றது. ரக்தக்குழாய்கள் இருவிதங்களென்றும் அவைகளுள் தமனீ என்பது ஒருவித ரக்தக்குழாய்களையே குறிக்குமென்பதும் இதுபோன்ற நவீனவாதங்களில் தற்காலம் நாம் பிரவேசிக்காமல் பொதுவில் தமனீ என்பது ரக்தக்குழாய்களை குறிப்பதாகச் சொன்னோம்' இனி பிரதிசயம் என்ற சொல்லும் அர்த்தத்தைக் கவனிப்போம். இதற்கு அதே அத்யாயத்தில் ட டணே அர்த்தம் கூறியுள்ளார். அதாவது "உபலேப இவ உபப:, ததிசய: ப்ரதிசய:" இதன் பொருள்—உபலேபம் என்றசொ

முதல்பக்கம் பார்க்கவும்.